# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 10 | . சைவநெறி | நேரம் :- 3.00மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..................................................................................

**பகுதி I**

*** மிகவும் பொருத்தமான விடையினை தெரிவு செய்து**

01. இறைவன் யாவற்றுக்கும் மேலான பொருள் என்பதால் பெறும் பெயர்?
    1. பரம்பொருள்  2. சச்சிதானந்தன்  3. பசுபதி  4. ஆண்டவன்

02. மாதத்தை குறித்து தமிழில் வழங்கும் மற்றொருசொல்
    1. திங்கள்  2. சூரியன்  3. சனி  4. சந்திரன்

03. இந்துசமயத்தின் முதல் நூல்கலாகப் போற்றப்படுவது.
    1. தேவாரம், திருவாசகம்  2. பெரியபுராணம், கந்தபுராணம்
    3. இராமாயாணம், மகாபாரதம்  4. வேதங்கள், ஆகமங்கள்

04. தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள இடம்
    1. திருவதிகை  2. திருவாரூர்  3. சிதம்பரம்  4. திருவீரட்டானம்

05. யாகங்கள் மேற்கொள்ளும் போது மேற்கொள்ள வேண்டிய சடங்குமுறைகளை விளக்குபவை?
    1. மந்திரங்கள்  2. பிராமனங்கள்  3. ஆரணியங்கள்  4. உபநிடதங்கள்

06. வசிட்டமாமுனிவரின் மனைவி.
    1. வாசுகி  2. ரோகினி  3. அருந்ததி  4. அகலிகை

07. அமாவாசை திதியுடன் தொடங்கும் பட்சம்?
    1. சுக்கிலபட்சம்  2. அபரபக்கம் 3. கிருஸ்ணபட்சம்  4. தேய்பிறை

08. திருக்கூட்டச்சிறப்பு எனும் பகுதி இடம்பெறும் நூல்?
    1. கந்தபுராணம்  2 பெரியபுராணம்
    3. திருவாசகம்  4. திருவிளையாடற்புராணம்

09. வையகத்தில் அன்பிற்சிறந்த தவம் இல்லை என கூறியவர்.
    1. திருவள்ளுவர்  2. விவேகானந்தர்  3. பாரதியார்  4. மகாத்மாகாந்தி

10. விநாயகர் சஷ்டி விரதம் அனுட்டிக்கும் நாட்களின் ண்ணிக்கை?
    1 10  2. 6  3. 20  4. 21

11. கலைகளின் தேவதையாக கூறப்படுபவர்?
    1 நடராஜர்  2. இலக்குமி  3. பிரம்மா  4. சரஸ்வதி

12. நள்ளிரவு தொடக்கம் அடுத்தநாள் நள்ளிரவு வரையான காலத்தை ஒரு நாள் என கொள்ளும் மதம்.
    1. கிறிஸ்தவசமயம்  2. இந்துசமயம்
    3. பௌத்தசமயம்  4. இஸ்லாம் சமயம்

13. இந்துசமய பிரிவுகளில் காணாபத்தியம் குறித்து நிற்கும் கடவுள்



kalvi.lk

1. முருகன் 2. விஷ்ணு 3. கணபதி 4. சூரியன்

14. தீபாவளி பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன்? .

1. கஜமுகன் 2. நரசாசுரன் 3. சிங்கமுகன் 4. தாரகன்

15. இறைவனை நிர்விகாரி என அழைக்கக் காரணம்?.

1. பாசத்தால் பீடிக்கப்படாமை 2. குணங்களை கடந்தமை
3. முற்றும் உணர்ந்தமை 4. எந்தவிகாரமும் அடையாமை

16. பிரமபுரம் என சிறப்பாக அழைக்கப்படும் தலம்?

1. சிதம்பரம் 2. சீர்காழி 3. திருக்காளத்தி 4. திருவெண்ணாமலை

17. “நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே…..” எனப்பாடியவர்?

1. நாவுக்கரசர் 2. சம்பந்தர் 3. திருமூலர் 4. பாரதியார்

18. திதிகளின் மொத்த எண்ணிக்கை?

1. 14 2. 15 3. 30 4. 31

19. திரிகரணங்கள் எனப்படுபவை?

1. மனம், வாக்கு காயம் 2. ஆணவம், கன்மம் மாயை
3. மனம், புத்தி, சித்தம் 4. பதி, பசு பாசம்

20. திரோபவம் எனப்படுவது?

1. படைத்தல் 2. காத்தல் 3. அழித்தல் 4. மறைத்தல்

21. “உற்றுமை சேர்வது……..” பதிகம் இடம்பெற்ற தலம்?

1. திருக்கமுலம் 2. தில்லை 3. திருமருகல் 4. திருவாவடுதுறை

22. கால அலகுகளில் பெரியது?

1. வாரம் 2. ஆண்டு 3. மாதம் 4. திதி

23. வேதாந்தம் என சிறப்பிக்கப்படுவது.

1. மந்திரம் 2. உபநிடதம் 3. ஆரணியம் 4. பிராமணம்

24. “இந்த சரீரம் நமக்கு கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்” என கூறியவர்.

1. ஔவையார் 2. திருமூலர் 3. நாவலர் 4. திருவள்ளுவர்

25. மணமக்களின் வீட்டில் கன்னிக்கால் நாட்டப்படும் திசை?

1. வடகிழக்கு 2. வடமேற்கு 3. கிழக்கு 4. வடக்கு

26. “சத்தியமேவஜயத” என்ற வாசகத்தை கொண்ட நூல்?

1. உபநிடதம் 2. ஆகமம் 3. புராணம் 4. வேதம்

27. காலத்தில் முந்திய இசைநூலாக கொள்ளும் வேதம்.

1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதவர்ணம்

28. திருமுறை பாடிய அருளாளரகளின் எண்ணிக்கை?

1. 27 2. 21 3. 28 4. 30

29. “குனித்தபுருவமும் கொவ்வைச்செல்வாயில்…..” எனும் பதிகத்தில் வர்ணிக்கப்படும் இறைவனின் வடிவம்.



kalvi.lk

1. அர்த்தநாரீஸ்வரர் வடிவம்  2. . நடராஜர் வடிவம்
3. சிவலிங்கவடிவம்  4. தட்சணாமூர்த்திவடிவம்

30. சூலைநோய் கொடுத்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்,
1 பாலநாவாயர்  2. நம்பியாரூரர்
3. ஆளுடையஅடிகள்  4. தருமசேனர்

31. சுந்தரர் வலக்கண் பார்வை பெற்ற தலம்.
1. திருவாரூர்  2. திருவொற்றியூர்
3. திருக்கத்தியேகதம்பம்  4. திருமருகல்

32. பெரியபுராண பாடல்கள் எண்ணிக்கை.
1. 4268  2. 1826  3. 4286  4. 4200

33. பூர்வக்கிரியைகளில் அடங்குபவை.
1. சிரார்த்தம், காதுகுத்துதல்  2. அன்னப்பிராசமை, சபிண்டீகரணம்
3. வித்தியாபரம்பம், திருமணம்  4. பெயர்சூட்டல் மகாளயம்

34. இறைவனுக்கு அகப்பூசையில் சாத்தவேண்டிய அஷ்டபுஸ்பங்கள் கொண்ட தொகுதி.
1. பொறுமை, அறிவு, கோபம்
2. உண்மை, தலம் அன்பு
3. ஐம்பொறியடக்கம், கொல்லாமை அருள்
4. இரக்கம், அன்பு, சாந்தம்

35. “அரிது அரிது மானிடராதல் அரிது” என பாடியவர்.
1. ஔவையார்  2. வள்ளுவர்  3. நாவுக்கரசர்  4. திருமூலர்

36. “சித்தமும் சொல்லாச் சேட்சியில்” என இறைவனை பாடியவர்?
1 திருமூலர்  2. உழவாரப்படையாளி  3. தாயுமானவர்  4. மாணிக்கவாசகர்

37. “உளபொருள் ஒன்றே அதனை அறிந்தோர் பல பெயர்களால் வழங்குவர்” என்று பொருள் கொண்ட சுலோகம் இடம் பெறும் வேதம்.
1. சாமம்  2. இருக்கு  3. அதர்வானம்  4. யசூர்

38. எடுத்த காரியம் தடையின்றி இடம்பெற நடைபெறும் சடங்கு.
1. மங்களநீராடல்  2. ஆரத்திஎடுத்தல்
3. காப்புக்கட்டல்  4 அக்கினிவலம் வரல்

39. சனிபகவானின் வாகனம்.
1. மூஷிகம்  2. காகம்  3. மயில்  4 எருது

40. அக ஆசாரங்களில் ஒன்றாக விளங்குவது?
1. மனதில் இறைபத்தியுடன் வாழல்  2. விதிப்படி பூசை செய்தல்
3. உடம்பை தூய்மையாக வைத்திருத்தல்  4. சுத்தமான உணவை அருந்துதல்

(1 x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II



kalvi.lk

**முதலாம் இரண்டாம் வினா உட்பட விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01) பின்வருவற்றுக்கு விடை தருக?

01. வாய்மைக்கு வள்ளுவர் கூறும் வரை விலக்கணம்?
02. பஞ்சாங்கத்தின் 5 அங்கங்கள் எவை?
03. ஒழுக்கம் பற்றி வள்ளுவர் கூறும் குறள் ஒன்று தருக?
04. இறைவனின் புத்திரர்களாக கொள்ளப்படும் மூர்த்தங்கள் 4 தருக?
05. கந்தசஷ்டி விரதம் எப்போது அனு‘டிக்கப்படும்?
06. திருக்கூட்டச்சிறப்பு இடம்பெறும் சுருக்கம்?
07. திருமுறைகளை தொகுத்தவர் தொகுப்பித்தவர் யார்?
08. கன்னிகாதானம் என்றால் என்ன?
09. நவீனயுகத்து அரிச்சந்திரன் என போற்றப்படுபவர்?
10. வாழ்க்கையின் 4 படிநிலைகளும் எவை?

(2 x 10 = 20 புள்ளிகள்)

(02) பின்வரும் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது பூதி அப்பாடல்களின் பொழிப்பையும் தருக.

1. அங்கமும் வேதமும்………………. 2. உற்றுமை சேர்வது……………….
3. குனித்த புருவமும்………………….. 4. மீளா அடிமை

( 2 x 5 = 10 புள்ளிகள்)

(03) ‘‘இறைவன் ஆண்மா ஈடேற்றமடைய ஐந்தொழில் புரிகிறான்’’

1. இறைவனை கடவுள் என அழைக்கக்காரணம் காரணம் யாது?
2. இறைவனின் இருநிலைகளை எழுதி விளக்குக?
3. இறைவன் புரியும் ஐந்தொழில்களை எழுதி விளக்குக. (2+ 3+ 5 = 10 புள்ளிகள்)

(04) ‘‘ஆண்ம ஈடேற்ற வழிகளில் விரதமும் ஒன்று’’

1. விரதம் என்பதற்கு ஆறுமுகநாவலர் கூறும் வரைவிலக்கணம் யாது?
2. புரட்டாதி சனி விரதகாலத்தில் சனிபகவானை எவ்வாறு வழிபாடாற்ற வேண்டும்.
3. விநாயகர் சஷ்டி விரதத்தின் நியதிகள் 5 தருக?

(2+ 3+ 5 = 10 புள்ளிகள்)

(05) ‘‘வேதமோ பாகமம் மெய்யாம் இறைநூல்’’

1. சைவத்தின் பொதுநூல், சிறப்புநூல் எது?
2. இந்து சமயத்தின் 6 பிரிவுகளையும் கடவுளையும் எழுதுக?
3. வேதத்தின் பகுதிகளை எழுதி விளக்குக?

(2+ 3+ 5 = 10 புள்ளிகள்)

(06) பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. தீபாவளி 2. திருமணச்சடங்கு 3. வாய்மை 4. காலக்கணிப்பு

(2 x 5 = 10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457